**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**அ.வ.எண்.118/2018**

2026–ம் வருடம் பிப்ரவரி திங்கள் 13–ம் நாளன்று 109 வது பிரதிவாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.66–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | : **முத்துவிஜயன்** | **தொழில்** | : |
| **த/பெ.** | : | **வட்டம்** | : |
| **முகவரி** | : | **மதம்** | : |
| **ஜாதி** | : | **வயது** | : |

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் 109 வது பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். 109 வது பிரதிவாதி முத்துவிஜயன் ஆதார் அட்டை நகல் பி.வா.சா.336 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 18.11.2008 ஆம் தேதிய இறந்துபோன 109 வது பிரதிவாதி முத்துவிஜயன் மகன் காளிதாஸ் பெயரிலான கிரைய ஆவணம் எண்.7077/2008 நகல் பி.வா.சா.337 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 13.02.2026 ஆம் தேதிய இறந்துபோன 109 வது

பிரதிவாதி முத்துவிஜயன் மகன் காளிதாஸ் பெயரிலான வில்லங்க சான்றிதழ் ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.338 ஆக குறியீடு செய்யப்படுகிறது. **(ஆவணம் முழுமையாக இல்லாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு குறியீடு செய்யப்பட்டது.)** கடந்த 13.02.2026 ஆம் தேதிய இறந்துபோன 109 வது பிரதிவாதி முத்துவிஜயன் மகன் காளிதாஸ் பெயரிலான கூட்டுப்பட்டா எண்.1336 ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.339 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 10.02.2008 ஆம் தேதிய வழக்கு சொத்து குறித்து வழக்கறிஞர் S.மணிகண்டசாமி அவர்களிடம் பெறப்பட்ட வழங்கிய சட்ட கருத்துரு (Legal Opinion) நகல் பி.வா.சா.ஆ.340 ஆக குறியீடு செய்யப்படுகிறது. **(உங்கள் மகன் கருத்துரை பெற்றதால் நீங்கள் தாக்கல் செய்ய இயலாது என்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.)** வாதிகள் தாக்கல் செய்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**<u>1 முதல் 4, 6 முதல் 15, 18, 19, 21 முதல் 40, 42 முதல் 46, 48 முதல் 50, 52 முதல் 58, 60, 62, 63, 64, 65, 67, 68, 69, 70 முதல் 76, 78 முதல் 85, 87 முதல் 100, 102, 104 முதல் 105, 106, 114, 115 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :**

இல்லை.

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் தற்போது கரூர் மாவட்டத்தில் வெங்கமேட்டில் குடியிருந்து வருகிறேன். நான் வசித்து வரும் ஊரிலிருந்து தும்பிவாடி கிராமம் சுமார் 15 கிலோமீட்டர் இருக்கலாம். பி.வா.சா.ஆ.337 மூலம் உங்கள் மகன் வாங்கிய கிரையபத்திரத்தை பி.வா.சா.ஆ.8-ன் அடிப்படையில் எழுதிக்கொடுத்த ரவிச்சந்திரனுக்கே அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களில் உரிமையில்லை என்பதால் பி.வா.சா.ஆ.337-ன் கீழ் உங்கள் மகனுக்கு கிரையம் எழுதிக்கொடுப்பதற்கு ரவிச்சந்திரனுக்கு சட்டப்படி உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. 106 நபர்கள் கிரையம் பெற்றதற்கான ஆவணங்களில் நீங்களோ, உங்கள் மகனோ சாட்சியாக கையொப்பம் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. தும்பிவாடி கிராமத்தில் எனக்கும், என் மகனக்கும், என் குடும்பத்தாருக்கும் பூர்வீக வகையில் எந்த சொத்துக்களும் இல்லை. உங்கள் மகன் வாங்கிய பி.வா.சா.ஆ.337 கிரையப்பத்திரம் செல்லாததால் அதன் அடிப்படையில் உங்கள் மகன் வாங்கிய பி.வா.சா.ஆ.339 கூட்டுப்பட்டா செல்லாது என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்திற்கு யார் சொல்லி சாட்சியம் அளிக்க வந்துள்ளீர்கள் என்றால் வழக்கறிஞர் அழைத்ததின் பேரில் இன்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பி.வா.சா.ஆ.340 ஆவணம் நீங்கள்

வழக்குரைஞருக்கு பொது வெளியில் அவப்பெயர் ஏற்படுத்த வேண்டி தாக்கல் செய்துள்ளீர்கள் என்றம் ஆவணத்திற்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.13 17:36:09 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.